# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1861 - 2014 මැයි මස 02 වැනි සිකුරාදා - 2014.05.02

*1861 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 634 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 640 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, மே மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, மே மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## பலப்பிட்டிய பிரதேச சபை

தென் மாகாண அரசாங்க சேவையில் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

தென் மாகாண அரசாங்க சேவையில் பலப்பிட்டிய பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள வேலை/கள ஊழியர், சுகாதார ஊழியர், அலுவலக ஊழியர் மற்றும் மின்னியல் ஊழியர் பதவிகளுக்கான உரிய தகைமைகள் உள்ள தென் மாகாணத்திற்குள் நிரந்தரமாக வதியும் ஆண்/பெண் இரு பாலார்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| 2. பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | ஆகக் கூடிய கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| வேலை/கள ஊழியர்கள் | 03 | பொ.நி.சு.6/2006(iv) படி PL- 1-2006 A ரூ. 11,730-10×120-10×130-10×145 12 × 160 -ரூபா 17,600 | கல்விப்பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப் பட்ட பாடசாலை ஒன்றில் ஆகக் கூடியது 8 ஆந் தரம் (9ஆம்ஆண்டு) சித்தியடைந்திருத்தல். |
| சுகாதார ஊழியர்கள் | 10 | பொ.நி.சு.6/2006(iv) படி PL- 1-2006 A ரூ. 11,730-10×120-10×130-10×145 12 × 160 -ரூபா 17,600 | கல்விப்பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப் பட்ட பாடசாலை ஒன்றில் ஆகக் கூடியது 8 ஆந் தரம் (9 ஆம் ஆண்டு ) சித்தியடைந்திருத்தல். |
| அலுவலக ஊழியர் | 01 | பொ.நி.சு.6/ 2006(iv) படி PL- 1-2006 A ரூ. 11,730-10×120-10×130-10×145 12 × 160 -ரூபா 17,600 | க.பொ.த.. (சா.த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங் களில் சித்தியடைந்திருத்தல். |
| மின்னியல் ஊழியர் | 01 | பொ.நி.சு.6/2006(iv) படி PL- 2-2006 A ரூ. 12,210-10×130-10×145-12 ×160 12 × 170-ரூபா 18,600 | க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.குறித்த பதவிக்கு ஏற்றவாறு தேசிய மொழிக் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய வாழ்க்கை தொழிற் திறன் (N.V.Q) ஆகக் கூடியது இரண்டாம் மட்டத்திற்கு கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல். |

**3. ஆட் சேர்த்துக் கொள்வதற்கு தேவையான தகைமைகள்.-**

1. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு 18-45 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் இருப்பவருக்கு இவ் வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது. அவர்கள் தமது அலுவலகத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.)
2. விண்ணப்பதாரி பரம்பரையாக அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியை அண்மித்த 03 வருட காலத்திற்குள் தென் மாகாண அதிகாரப் பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி சீரிய நடத்தையும், சிறந்த தேகாரோக்கியமும் கொண்டிருத்தல் வேண்டும்.
5. தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டிக்கப்பட்டவராக இருத்தலாகாது.
6. குறித்த பதவி தொடர்பாக அனுபவம் பெற்றிருத்தல் விசேட கவனத்தில் கொள்ளப்படும்.
7. விண்ணப்பதாரி மேலே உரிய பதவிக்கு எதிரே காட்டப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியாகும் போது பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**4. ஆட்சேர்த்துக்கொள்வதற்கான பொது நிபந்தனைகள் :**

(1) இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும் . விதவைகள்/அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(2) பலப்பிட்டிய பிரதேச சபையில் தற்போது தற்காலிக/அமைய/பயிலுநர்/ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

(3) இப் பதவி 03 வருடங்கள் தகுதிகான் காலத்தைக் கொண்டது.

(4) மேற்கூறப்பட்டுள்ள சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகளுக்கும் மற்றும் இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் நிபந்தனைகளுக்கும், நிதிச்சட்டக்கோவை விதிமுறைகளுக்கும் அரச திணைக்கள கட்டளைச் சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கும் தென் மாகாண சபை, தென் மாகாண அரச சேவை ஆணைக்குழு மற்றும் பலப்பிட்டிய பிரதேச சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உடன்பட்டு செயற்படுதல் வேண்டும்.

**5. ஆட் சேர்ப்பு முறை :**

விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமைகளைப் பரீட்சித்துப் பார்ப்பது மட்டுமன்றி ஆட்சேர்ப்பு முறையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெறப்பட்ட உச்சப் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

| புள்ளிகள் பெற்றுத் தரும் பிரதான விடயம் | உச்ச புள்ளிகளின் அளவு | தெரிவு செய்வதற்காக கவனிக்கப்படும் புள்ளிகளின் உச்ச வரம்பு |
|---|---|---|
| 1. கல்வித் தகைமைகள் | 30 | 50 % |
| 2. மற்றும் ஏனைய தகைமைகள் (2 ஆம் அட்டவணைக்கு) | 10 | |
| 3. அனுபவம் ( 2 ஆவது அட்டவணைக்கு ஏற்ப) | 10 | |
| 4. சபை அதிகாரத்தில் வசித்தல் ( ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம்) | 45 | |
| 5. நேர்முகப் பரீட்சையின் போது காணப்படும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

**குறிப்பு**:

(1) ஆரம்ப தகைமைகளைப் பரீட்சித்தல், நேர்முகப்பரீட்சையின் போது மேற்கொள்ளப்படும். ;

(2) ஆரம்ப தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சையின் போது பெறப்பட்ட புள்ளிகளின் திறமைகளின் அடிப்படையிலும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைகளுக்கும் ஏற்ப பதவிகளுக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**6. விண்ணப்பிக்கும் முறை :**

இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின்படி 12" × 8" அளவிலான கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் 2014.05. 31ஆந் திகதியன்று அல்லது அத் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "தவிசாளர், பலப்பிட்டிய பிரதேச சபை, பலப்பிட்டிய" எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். கூறப்பட்ட விதிகளுக்கு மாறான, பூரணமற்ற விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

7. இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் அல்லது ஆட்சேர்ப்பில் காலதாமதம் அல்லது மாற்றங்கள் செய்தல் மற்றும் இவ் அறிவித்தலை தடைசெய்தல் போன்ற அதிகாரங்கள் பலப்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளரை சார்ந்ததாகும். தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புகளின் ஏதேனும் கருத்துக்கள் தெளிவின்றியிருந்தால் சிங்களமொழிமூலத்தை சரியானதாகக் கொள்ளவும்.

ஏ. தயாரத்ன த சில்வா,
தவிசாளர்,
பலப்பிட்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பலப்பிட்டிய.
2014, ஏப்பிறல் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

தென் மாகாண அரசாங்க சேவை .................... பதவி

**பலப்பிட்டிய பிரதேச சபை**

1. (i). முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
2. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
3. பிரதேச செயலாளர் பிரிவு :----.
4. நிரந்தர முகவரி :----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
6. பால் :----.
7. பிறந்த திகதி :----.
   ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
8. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதிக்கு வயது :-----.
9. இலங்கைப் பிரஜையாவது பிறப்பினாலா? பதிவின் மூலமா?----.
10. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகள் பற்றிய விபரம்):- (சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை இணைக்கவும்).
11. விண்ணப்பதாரி தற்போது சேவையொன்றில் ஈடுபட்டுள்ளவராயின் :-
   (i) பதவி :----.
   (ii) சேவை புரியும் இடம் :---.
   (iii) நியமனத் திகதி :----.
12. நீங்கள் எப்போதாவது குற்றச்சாட்டு ஒன்றிற்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :-----.
11. விண்ணப்பதாரியின் உறுதியுரை :-

இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் வெளிப்படுத்துகின்றேன். இவ்வாட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகளுக்கு அமைய என்னால் பிழையான தகவல்கள் ஏதும் தரப்பட்டிருப்பதாக நிரூப்பிக்கப்படுமாயின் பதவி நியமனத்திற்கு முன்னராயின் தகைமை இழப்பிற்கும் பதவி நியமனத்திற்கு பின்னராயின் பணி நீக்கத்திற்கும் உள்ளாக்கப்படுவேன் என்பதை அறிவேன்.

---------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----

**அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்**

இவ் விண்ணப்பதாரி தற்போது இந் நிறுவனத்தில் / திணைக்களத்தில் சேவையாற்றுகின்றார். அவரது கடமையும்/ நடத்தையும் திருப்திகரமானது எனவும் அவருக்கு இந்நியமனம் கிடைக்கப்பெற்றால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

---------------------,
நிறுவனத் தலைவரது கையொப்பம்.

பெயர் :-----.
பதவியின் பெயர் :-----.
திணைக்களம்/ நிறுவனம் :-----.
(பதவி முத்திரையை இடவும்)
திகதி :-----.

5-08

---

**நீர்கொழும்பு மாநகர சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையில் பதவிகள் வெற்றிடங்களை நிரப்புதல்

நீர்கொழும்பு மாநகர சபையில் தற்போது வெற்றிடங்களாயுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு மேல் மாகாணத் தினுள் வதியும் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து “ மாநகர ஆணையாளர், நீர்கொழும்பு மாநகர சபை, நீர்கொழும்பு” எனும் முகவரிக்கு 02.06.2014 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தற்போது மாகாண அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் விண்ணப்பங்களை சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவரூடாக அனுப்புதல் வேண்டும்.

| தொடர் இல. | பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | வேலை/கள ஊழியர் (அ.அ.உ.III) | 7 | பீஎல்I -2006ஏ ஆரம்பச் சம்பள நிலை ரூபா 11,730 ( 4 ஆவது படிநிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு) | ஆகக் குறைந்தது 5 ஆம் தரம்/ஆண்டு 6 சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 2 | சுகாதார தொழிலாளி (அ.அ.உ.III) | 4 | பீஎல்I -2006ஏ ஆரம்பச் சம்பள நிலை ரூபா 11,730 ( 4 ஆவது படிநிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு) | தொழிற்றகைமை கருத்திற் கொள்ளப்படமாட்டாது. |
| 3 | அலுவலக அலுவல்கள் உதவியாளர் (அ.அ.உ.III) | 2 | பீஎல்III -2006ஏ ஆரம்பச் சம்பள நிலை ரூபா 13,060 ( 7 ஆவது படிநிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு) | (குறிப்பு 1 ஐப் பார்க்கவும்) |
| 4 | நூல்நிலைய உதவியாளர் (அ.அ.உ.III) | 2 | பீஎல்III -2006ஏ ஆரம்பச் சம்பள நிலை ரூபா 13,060 ( 7 ஆவது படிநிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு) | (குறிப்பு 1 ஐப் பார்க்கவும்) |
| 5 | தொலைபேசி இயக்குநர் உதவியாளர் (அ.அ.உ.III) | 1 | பீஎல்III -2006ஏ ஆரம்பச் சம்பள நிலை ரூபா 13,060 ( 7 ஆவது படிநிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு) | (குறிப்பு 1 ஐப் பார்க்கவும்) |
| 6 | விற்பனை நிலைய நிருவாகத்தர் தரம் II | 1 | எம் என்I-2006ஏ ஆரம்பச் சம்பள நிலை ரூபா 13,120 ( 4 ஆவது படிநிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு) | (குறிப்பு 2 ஐப் பார்க்கவும்) |
| 7 | சாரதி | 1 | பீஎல்III -2006ஏ ஆரம்பச் சம்பள நிலை ரூபா 12,470 ( 4 ஆவது படிநிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு) | (குறிப்பு 3 ஐப் பார்க்கவும்) |

**குறிப்பு 1**: நூல்நிலைய உதவியாளர், அலுவலக அலுவல்கள் உதவியாளர், தொலைபேசி இயக்குநர் பதவிகளுக்காக பூர்த்திசெய்திருக்க வேண்டிய கல்வித் தகைமைகள் :

க.பொ.த.(சா.த.) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு 2** : விற்பனை நிலைய நிருவாகத்தர் பதவிகக்காக பூர்த்திசெய்திருக்க வேண்டிய கல்வித் தகைமைகள் :

க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் உட்பட 4 பாடங்களில் திறமை சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

நல்ல உடற்கட்டுடையவராகவும் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நன்கு உரையாடக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** *3* : *சாரதிப் பதவிக்காக பூர்த்தி செய்திருக்க வேண்டிய கல்வித் தகைமைகள்* :

*க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 2 பாடங்களில் திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ( ஒரே அமர்வில் ஆகக் குறைந்தது 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)*

*நிகர நிறை 24 அந்தருக்கு குறைந்த ஸ்ரேஷன் வெகன் வாகனங்கள் செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.*

*சாரதியாக ஆகக் குறைந்தது 3 வருட அனுபவமிருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் நிரூபித்தல் வேண்டும்) குறைந்தது 5 அடி உயரம் கொண்டிருத்தல் வேண்டும். இரவு மற்றும் பகல் காலங்களில் சேவையாற்றக்கூடிய நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டியதுடன் நல்ல கண் பார்வை உடையவராகவும் இருத்தல் வேண்டும். பெருந்தெருக்கள் சட்டக்கோவை பற்றிய நல்லஅறிவு இருத்தல் வேண்டும்.*

**சேவை நிபந்தனைகளும் நியதிகளும் :**

(அ) *இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் .*

(ஆ) *விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.*

(இ) *இப் பதவிக்கு நியமனம் பெற்றோர் 3 வருட காலம் நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டவராவர். இக்காலத்திற்குள் வேலை, வருகை மற்றும் நடத்தை திருப்திகரமானதாக இருக்குமாயின், நன்னடத்தை கால இறுதியில் நிரந்தரமாக்கப்படுவர். ஏற்கனவே அரச சேவையில் /மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிப்போர் 1 வருட பதிற் கடமையாற்றும் பதவியில் வைக்கப்படுவர்.*

(ஈ) *இவ்வாட்சேர்ப்பு மேல் மாகாணத்தில் நிதி ஒழுங்கு விதிகளுக்கும் மேல் மாகாண சபையினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய ஒழுங்கு விதிகளுக்கும், கட்டளைகளுக்கும் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்குக் காலம் அமுலாக்கப்படும் நிபந்தனைகளுக்கும் திணைக்கள கட்டளைகளுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு நியமனம்பெற்றோர் கட்டுப்பட்டவராவர்.*

(உ) *சாரதிப் பதவிக்கு நியமிக்கப்படுவோர் யாவரும் வினைத்திறமைகாண் தடையை கடந்து செல்வதற்கு முன் –*

(1) *பெருந்தெருக்கள் சட்டக்கோவை பற்றிய அறிவை அளவிடுவதற்காக நடாத்தப்படும் பரீட்சையில்,*

(2) *மோட்டார் இயந்திர விஞ்ஞானம் பற்றி நடாத்தப்படும் பரீட்சையில், சித்தியடைதல் வேண்டும். இப்பரீட்சை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் நடாத்தப்படும். சித்தியடையத் தவறும் பட்சத்தில் சம்பள உயர்வு தாமதப்படுத்துவதற்கு ஏதுவாகும்.*

**ஏனைய பொது நிபந்தனைகள் :**

1. *விண்ணப்பம் கோரும் இறுதி திகதி உட்பட்ட மாதத்திலிருந்து அண்மித்த மாதத்தின் கடைசித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ளோருக்கு இந்த வயதெல்லை ஏற்புடைத்தாகாது.*

2. *விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமாகவோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.*

3. *விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமுமுடையவராகவிருத்தல் வேண்டும். இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட் டால் ஒரு மாத காலத்திற்குள் அரச வைத்தியர் ஒருவரினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும் என்பதுடன் அப்பரிசோதனையில் உடல்நலம் குன்றியவராக தெரியவரின் நியமனம் இரத்து செய்யப்படும்.*

4. *தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது.*

5. *விண்ணப்பம் கோரும் திகதிக்கு அண்மித்த மூன்று வருடகாலம் மேல் மாகாணத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.*

6. *அரச/மாகாண அரசாங்க சேவையில் இருந்து வெளியேற்பட்டவராக இருத்தல் கூடாது என்பதுடன் மாகாண அரச நிருவாக சுற்ற றிக்கை இல. 44/ 90 இன் கீழ் ஓய்வு பெற்றவராகவோ இருத்தலும் கூடாது.*

**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம் :**

(1) *நூல்நிலைய உதவியாளர், வேலை/கள ஊழியர், அலுவலக அலுவல்கள் உதவியாளர் மற்றும் தொலைபேசி இயக்குநர் ஆகிய பதவிகளுக்காக கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்களை பரிசீலித்து தகைமைபெறுகின்ற விண்ணப்பதாரிகள் பொது நிருவாக சுற்றறிக்கை இல. 24/95 இற்கமைய நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு ஆட் சேர்த்துக் கொள்ளப்படுவர்.*

(2) *விற்பனை நிலைய நிருவாகத்தர் பதவிக்கு தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் பொது நிருவாக சுற்றிக்கை இல. 15/90 இற்கமைய பொது விவேகப் பரீட்சைக்கான 1 1/2 மணித்தியால வினாப்பத்திரத்தினதும் பொது அறிவுப் பரீட்சைக்கான 1 மணித்தியால வினாப்பத்திரத்தினதும் பெறுபேறுகளின் மீது ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்.*

(3) சாரதிப் பதவிக்கான முதன்மைத் தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுவர். அவ்வாறு சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் திணைக்களத்தின் பிரிதிநிதியொருவர், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் வாகன பரிசோதகரொருவர் மற்றும் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அலுவலர் அடங்கிய சபையினால் நடாத்தப்படும் மோட்டார் வண்டி ஓட்டுதலில் நிபுணத்துவத்தை அளவிடும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

மாநகர ஆணையாளர்,
நீர்கொழும்பு மாநகர சபை.

மாநகர சபை,
நீர்கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவை**
**நீர்கொழும்பு மாநகர சபை**

( அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

........................................................................ பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
3. தேசிய அடையாள அட்டை இல.:----.
4. நிரந்தர முகவரி :----.
5. தபால் முகவரி :----.
6. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
7. நிரந்தரமாக வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு :----.
8. நிரந்தரமாக வசிக்கும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான அதிகாரப் பிரதேசம் :-----.
9. பிறந்த திகதி :----.
10. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது:----.
11. கல்வித் தகைமைகள் (நிழற்படப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) :----.
12. அனுபவங்கள்:----.
13. தொழில்சார் தகைமைகள் (நிழற்படப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) :----.
14. ஏனைய தகைமைகள்:----.
15. நீங்கள் நீதிமன்றினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா?:----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும் பிழையற்றதும் என வெளிப்படுத்துகின்றேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னராயின் பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

---------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----

**(விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் பதவி வகிப்பவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்)**

விண்ணப்பதாரியான திரு. / திருமதி/செல்வி/ ..................................................................................தற்போது இத்திணைக்களத்தில் / நிறுவனத்தில் சேவையாற்றுகிறார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தெரிவு செய்யப்படுபவராயின், அவரை இச் சேவையிலிருந்து விடுகிக்க

முடியும்/முடியாது. அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுபடுத்துவதுடன் விண்ணப்படிவத்தை சிபார்சு செய்கின்றேன்/செய்யவில்லை.

---------------------,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவியின் பெயர் :-----.
திணைக்களம்/நிறுவனம் :-----.
(பதவி முத்திரையை இடவும்)
திகதி :-----.

5-18

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## குச்சவெளி பிரதேச சபை - நிலா வெளி

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டம்

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் ( அத்தியாயம் 272) 7(2) ஆம் பிரிவின் இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவர்களிடமிருந்து 2014.12.31 ஆந் திகதி வரை ஊன்வினைஞர் தொழில் நடாத்த அனுமதி தரும்படி விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

குறிப்பிட்டுள்ள பிரதேச சபையின் இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறித்த அனுமதி வழங்குவதை ஆட்சேபிக்க விரும்பின் ஆட்சேபனைக்கான காரணங்களை இவ்வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளில் எமக்கு அனுப்பி வைக்கும் படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அ. முபாரக்,
தவிசாளர்,
குச்சவெளி பிரதேசசபை.

பிரதேசசபை அலுவலகம்,
குச்சவெளி.

அட்டவணை

| இல. | விண்ணப்பதாரியின் பெயர் | முகவரி | வியாபாரத்தின் தன்மை | கடை அமைந்துள்ள இடத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | நசுர்தீன் றகீப் | இக்பால் நகர் நிலாவெளி | மாட்டிறைச்சிக் கடை | இக்பால் நகர் |
| 2 | R. நளீர் | 4 ஆம் வட்டாரம் இறக்ககண்டி | மாட்டிறைச்சிக் கடை | வாழையூற்று |
| 3 | J. சுல்பிக் | 4 ஆம் வட்டாரம் இறக்ககண்டி | மாட்டிறைச்சிக் கடை | இறக்ககண்டி |
| 4 | A.J.M.முஸம்மில் | காசிம் நகர் குச்சவெளி | மாட்டிறைச்சிக் கடை | குச்சவெளி |
| 5 | M.M. இஸ்மாயில் | புடவைக் கட்டு செந்தூர் | மாட்டிறைச்சிக் கடை | புடவைக்கட்டு |

| இல. | விண்ணப்பதாரியின் பெயர் | முகவரி | வியாபாரத்தின் தன்மை | கடை அமைந்துள்ள இடத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| 6 | A.C.றொயஸ் | காசிம் நகர் குச்சவெளி | மாட்டிறைச்சிக் கடை | சலப்பையாறு |
| 7 | A.சலாகுதீன் | 4 ஆம் வட்டாரம் புல்மோட்டை | மாட்டிறைச்சிக் கடை | புல்மோட்டை- 2 ஆம் இலக்கம் |
| 8 | காதர் சாய்வு அமீன் | 4 ஆம் வட்டாரம் புல்மோட்டை | மாட்டிறைச்சிக் கடை | அறபாத் நகர் புல்மோட்டை |
| 9 | செய்யது அகமது இல்முதீன் | 1 ஆம் வட்டாரம் நிலாவெளி | கோழி இறைச்சிக் கடை | 8 ஆம் மைல்கல் நிலாவெளி |
| 10 | அபூபக்கர் இப்றாலெப்பை | கோபாலபுரம் நிலாவெளி | கோழி இறைச்சிக் கடை | கோபாலபுரம் |
| 11 | முகம்மது இப்றாஹீம் மஃதூம் | 4 ஆம் வட்டாரம் இறக்ககண்டி | கோழி இறைச்சிக் கடை | இறக்ககண்டி |
| 12 | முகம்மது அப்துல்லாஹ் முகம்மது ஹில்மி | இக்பால் நகர் நிலாவெளி | கோழி இறைச்சிக் கடை | இக்பால் நகர் |
| 13 | அப்துல் றகீம் மொஹம்மட் றியாஸ் | 1 ஆம் வட்டாரம் நிலாவெளி | கோழி இறைச்சிக் கடை | நிலாவெளி 2 ஆம் வட்டாரம் |
| 14 | அலியுள்ளா முகம்மது இர்ஸாத் | வாழையூற்று நிலாவெளி | கோழி இறைச்சிக் கடை | வாழையூற்று |
| 15 | முகைதீன் கச்சு முகம்மது | இக்பால் நகர் நிலாவெளி | கோழி இறைச்சிக் கடை | கும்புறுப்பிட்டி |
| 16 | அப்துல் கபூர் றொஜஸ் | காசிம் நகர் குச்சவெளி | கோழி இறைச்சிக் கடை | குச்சவெளி |
| 17 | செய்யது அகமது நபார்தீன் | புடவைக் கட்டு திரியாய | கோழி இறைச்சிக் கடை | புடவைக்கட்டு |
| 18 | ஜாகூப் முகம்மது மில்கான் | ஜாயா நகர் குச்சவெளி | கோழி இறைச்சிக் கடை | ஜாயா நகர் |
| 19 | முகம்மது இஸ்மாயில் முகம்மது நழீம் | 04 ஆம் வட்டாரம் புல்மோட்டை | கோழி இறைச்சிக் கடை | புல்மோட்டை 1 ஆம் வட்டாரம் |
| 20 | கச்சு முகம்மது அப்துல் கபூர் | 03 ஆம் வட்டாரம் புல்மோட்டை | கோழி இறைச்சிக் கடை | புல்மோட்டை 2 ஆம் வட்டாரம் |
| 21 | அப்துல் கபூர் முகம்மட் முசவ்வீர் | 03 ஆம் வட்டாரம் புல்மோட்டை | கோழி இறைச்சிக் கடை | புல்மோட்டை 3 ஆம் வட்டாரம் |
| 22 | முகம்மதுமீராசாகிப் ரஹ்மதுல்லாஹ் | 04 ஆம் வட்டாரம் புல்மோட்டை | கோழி இறைச்சிக் கடை | புல்மோட்டை 4 ஆம் வட்டாரம் |

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் | தபால் செலவு |
|---|---|---|
| | ரூபா ச. | ரூபா ச. |
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | தபால் செலவு |
|---|---|---|
| | ரூபா ச. | ரூபா ச. |
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2014***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 02.05.2014 | .. | நண்பகல் 12 | வியாழன் | 17.04.2014 |
| | | வெள்ளி | 09.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.04.2014 |
| | | வெள்ளி | 16.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.05.2014 |
| | | வெள்ளி | 23.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.05.2014 |
| | | வெள்ளி | 30.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.05.2014 |
| **யூன்** | .. | வெள்ளி | 06.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.05.2014 |
| | | வெள்ளி | 13.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.05.2014 |
| | | வெள்ளி | 20.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.06.2014 |
| | | வெள்ளி | 27.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.06.2014 |
| **யூலை** | .. | வெள்ளி | 04.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.06.2014 |
| | | வெள்ளி | 11.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.06.2014 |
| | | வெள்ளி | 18.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.07.2014 |
| | | வெள்ளி | 25.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.07.2014 |

***பீ. எச். எல். வீ. டி சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*